# ஏதோ ஓர் எண்ணுக்கு

பாட ஆசிரியர்



லையுபோ

மே 25,   வாரம் 8

அர்மீனியா

1



- அர்மீனியாவில் இயேசுவின் அன்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள லையுபோவ் மிகவும் விரும்பினாள். ஆனால் எப்படி என்றுதான் தெரியவில்லை.
- தொலைபேசி மூலம் இயேசுவின் அன்பைச் சொல்லுமாறு ஒரு நண்பர் அறிவுரை சொன்னார். அது 1995ம் வருடம்; முன்னாள் சோவியத் யூனியனில் அப்போது அலைபேசிகள் கிடையாது. அதனால் தொலைபேசி இணைப்பு வழியாகத்தான் தொடர்பு கொள்ள வேண்டும்.
- முன்பின் தெரியாதவர்களிடம் தொலைபேசியில் பேசி லையுபோவுக்குப் பழக்கமில்லை. எங்கிருந்து ஆரம்பிப்பது என்றும் தெரியவில்லை.



- தான் தொலைபேசி மூலம் சாட்சியை அறிவிப்பது தேவனுடைய சித்தம்தானா என்று கேட்டு ஏழுநாட்கள் ஜெபித்தார்.
- அவர் ஜெபித்தபோது, முன்பின் தெரியாதவர்களிடம் பேசுவதற்கான ஓர் ஆவல் அவரது உள்ளத்தில் உருவானது. ஏழாம் நாளில், ‘நான் எந்த எண்ணுக்கு அழைக்க வேண்டும்’ என்று ஜெபித்தார். பிறகு, எதேச்சையாக ஓர் எண்ணை அழைத்தார்.
- “ஹலோ, நான் உங்களுக்கு வேதாகம விஷயங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்” என்று கூறினார். அதற்கு எதிர்முனையில் அவர் உணர்ந்த பிரதிவினையும், கேட்ட பதிலும் ஊக்கமளிப்பதாக இல்லை.



- சிலர் விரக்தியோடு காணப்பட்டார்கள். வேறு சிலர் கவனமாகக் கேட்டார்கள்; ஆனால் வேதாகம காரியங்களை அறிந்துகொள்ள விரும்பவில்லை.
- பிறகு ஓல்கா என்கிற வயதான பெண்மணி ஒருவரை லையுபோவ் அழைத்தார். அவர் வேதப்பாடம் படிக்க ஒத்துக்கொண்டார்.
- ஓல்காவுக்கு லையுபோவுடன் தொலைபேசியில் பேசுவது பிடித்திருந்தது; இரண்டு பெண்களும் தொடர்ந்து பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். ஒருமுறை பேசியபோது, தன்னுடைய மாமியார் சுகமில்லாமல் இருப்பதாகவும், அவர் கிறிஸ்தவரல்ல என்றும் ஓல்கா சொன்னார்.



- “உங்கள் மாமியாரிடம் இயேசுவைப் பற்றிச் சொல்லுங்கள். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி அவரிடம் கூறுங்கள்” என்று லையுபோவ் சொன்னார்.
- ஒரு சில நாட்களுக்கு பிறகு லையுபோவ் தொலைபேசியில் அழைத்தபோது, தன் மாமியார் மரித்துவிட்டதாக ஒல்கா சொன்னார். ஆனால் நம்பிக்கை பெற்றவராக மரித்ததாகக் கூறினார்.
- “நாம் பேசின அன்றைக்கே அவரிடம் சென்று, இயேசுவைப்பற்றி அவரிடம் சொன்னேன். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தன் பாவங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார்.




- இரண்டு வருடங்கள் கழித்து, ஓல்கா இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, இன்னொரு உறவினருடன் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றார்.
- லையுபோவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஓல்கா, அவரது மாமியார், இன்னொரு உறவினர் ஆகியோரை தொலைபேசி ஊழியம் மூலமாகவே கிறிஸ்துவுக்காக ஆயத்தம் செய்யமுடிந்தது.
- தன் தொலைபேசி ஊழியத்தை லையுபோவ் தொடர்ந்தார். ஒருசமயம் தேவனுடைய பெயரைச் சொன்னதுமே பேசிக்கொண்டிருந்தவர் அழ ஆரம்பித்தார். “என் மகளுக்கு சுகமில்லாமல் இருக்கிறது. பயங்கர வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.



- விரும்பினால், அவளிடம் பேசுங்கள்” என்று கூறினார். லையுபோவ் பதில் சொல்லுவதற்கு முன்னரே, தொலைபேசியை தன் 23 வயது மகளான ஆலாவிடம் கொடுத்தார்.
- லையுபோவ் பேசினார், ஆனாலும் ஆலா பதிலளிக்கவில்லை. மறுமுனை அமைதியாகவே இருந்தது. மறுமுனையில் பேசுகிறவர் அமைதியாகவே இருந்து, தான் மட்டும் பேசி லையுபோவுக்கு பழக்கமில்லை; எனவே உதவிவேண்டி ஜெபித்தார்.
- அடுத்தமுறை அழைத்தபோது, தான் எலன் ஒய்ட் எழுதின ஆரம்பக்கால எழுத்துக்கள் எனும் புத்தகத்தை வாசித்து, அதில் புதிய பூமி குறித்த விளக்கினார்.



- ஆனால் ஆலா பேசவில்லை. புதிய பூமியில் தேவன் தம் பிள்ளைகளுக்காக ஆயத்தம்பண்ணுகிற அழகான தோட்டத்தை பற்றி லையுபோவ் விளக்கினார்.
- பிறகு, சோவியத்காலத்தில் அழகான தோட்டம் போல வரையப்பட்ட ஒரு பொம்மைப்படம் லையுபோவுக்கு நினைவிற்கு வந்தது. “அந்த வரைபடம் உனக்கு ஞாபகமிருக்கிறதா?” என்று லையுபோவ் கேட்டார்.
- மறுமுனையில் மகிழ்ச்சியான சிரிப்பு சத்தம் கேட்டது. லையுபோவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆலாவிடமிருந்து கேட்ட முதல் சத்தம் அதுதான். “உனக்கு சிரிக்கத் தெரிகிறது!” என்று ஆச்சரியத்தோடு சொன்னார்.



- “அந்த பொம்மைப்படத்தில் உள்ளதைவிட மிகவும் அழகான ஒரு தோட்டத்தை தேவன் ஆயத்தம்பண்ணி வருகிறார்” என்று கூறினார்.

- லையுபோவ் தொடர்ந்து புதிய பூமி பற்றியே பேசினார். பிறகு அந்த இணைப்பில் வேறொரு பெண் பேசினார். “மன்னிக்கவும், வெகுநேரமாக நீங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் சொல்லுவது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது” என்று அந்தப் பெண் சொன்னார்.

- ஆலா வாய்விட்டுச் சிரித்தாள். மிகவும் பூரிப்போடு பேசினாள். தங்கள் இணைப்பை யாரோ இரகசியமாக ஒட்டுக்கேட்டதை நினைத்து அவளுக்கு சிரிப்பாக வந்தது.




- பிறகு, ஆலாவின் அம்மா அந்த இணைப்பில் வந்தார். ஆலா பேசுவதைக் கேட்டு அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.
- இவ்வாறுதான் ஆலாவும், அவளது அம்மாவும், அவர்களுடைய உறவினரும் லையேபோவின் வேதப்பாட ஆராய்ச்சியில் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள். ஒரு சில வாரங்கள் கழித்து, இன்னொரு ஆணும் அந்த தொலைபேசி இணைப்பில் சேர்ந்தார்.
- ஒருநாள் வேதப்பாடம் நடந்து கொண்டிருந்தபோது, “என்னை மன்னிக்கவும், நீங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது” என்று சொன்னார்.



சில நாட்கள் கழித்து, ஆலா இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றாள். வலிப்பு பிரச்சனைகள் நீங்கியது; இன்று உண்மையுள்ள அட்வென்டிஸ்ட் விசுவாசியாக இருக்கிறாள்.

**தொலைபேசி மூலம் சாட்சி சொல்ல உதவி செய்ததற்காக லையுபோவ் தேவனைத் துதிக்கிறாள். “தொலைபேசி மூலமாக மக்களுக்கு, குறிப்பாக முன்பின் தெரியாதவர்களுக்குச் சேவைசெய்ய உதவிய தேவனுக்கு நன்றி” என்றாள்.**